# சிவகுரு ஆதீனம்
# SIVAGURU ATHEENAM

சிவகுரு ஆதீன மாதாந்த செய்தி மடல்
கலியுகம் 5123 பிலவ வருடம் - ஆனி மாதம் (3ம் மாதம்)
Monthly News Bulletin of Sivaguru Atheenam
Kaliyuga 5123 Pilava Year – June Month (3rd Month)

மலர் 1 இதழ் 3 Volume 1 Issue 3



திருவாசகத்திற்கு உருகார், ஒரு வாசகத்திற்கும் உருகார்

ஆனி மாதத்தில் வருகின்ற மக நட்சத்திரமானது மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை நன்னாளாகும். சிவபெருமானே மாணிக்கவாசகப் பெருமானுக்கு குருவாக வந்து திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் உபதேசம் செய்தார்.

எனவே சிவபெருமானே குருவாக எழுந்தருளி உபதேசித்தமையால் **சிவகுரு** எனும் நாமம் சிவபெருமானைக் குறித்து நிற்கின்றது.



## குருவுடன் ஒரு நிமிடம்...

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க...

சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி...

மாணிக்கவாசக சுவாமிகள்



மாணிக்கவாசகர்

## சிவகுரு சிந்தனை...

உணர்வுகளை விட சிந்தனைகள் ஆழமானவை. எப்பொழுது உணர்வுகள் சிந்தனைகளை, சிந்திக்கும் திறனை, முடிவெடுக்கும் ஆற்றலை மழுங்கடிக்கின்றனவோ அப்பொழுது மனிதன் துன்பப்படுகின்றான், குழப்பத்தில் தவிக்கின்றான், வாழ்க்கையே வேண்டாம் என்று விரக்தியின் உச்சத்திற்குச் செல்கின்றான். ஆகவே நாம் மகிழ்ச்சியாக நிம்மதியாக வாழவேண்டும் என்றால் உணர்வுகளை கையாள்வதற்கு, முகாமைத்துவம் செய்வதற்கு நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதற்கு எடுத்துக்காட்டாக ஞானிகள், மகான்கள் என பலர் நமக்கு கிடைத்திருக்கிறார்கள். அப்படியானவர்களில் ஒருவர் தான் மாணிக்கவாசக சுவாமிகள். இன்றைய கால இளைஞர்களிற்கு நல்ல முன்னுதாரணமாக (role model) மாணிக்கவாசக சுவாமிகள் திகழ்கிறார்கள். மாணிக்கவாசக சுவாமிகளின் மன ஒருமைப்பாட்டால், பிரம்மச்சரிய சக்தியால் அவரைத்தேடி வேலை, பட்டம், பதவி என அனைத்தும் வந்தன. அவர் எதனையும் தேடிச் செல்லவில்லை. அதே போல் இன்றைய கால இளைய சமுதாயத்தினரும் தம்மை அந்நிலைக்கு உயர்த்திக் கொள்ள வேண்டும். இளையவர்கள் மட்டுமல்ல நாம் அனைவருமே அவ்வழியில் நடப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்தகால பதிவுகள்

2009ம் ஆண்டில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற தமிழ் இன அழிப்பின் உச்சக்கட்டத்தில் கொல்லப்பட்ட எமது உறவுகளை நினைவு கூரும் முகமாக, பிலவ வருடம் வைகாசி நான்காம் நாள் (04.02.5123) செவ்வாய்க்கிழமை அன்று 'முள்ளிவாய்க்கால் தமிழ் இன அழிப்பு நினைவு தினம்' வடக்கு – கிழக்கு தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் தமிழகத்திலும் அனுஷ்டிக்கப்பட்டது. 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைப்பாளர்களில் ஒருவராகிய தவத்திரு வேலன் சுவாமிகள் அவர்கள் அன்றைய தினம் முள்ளிவாய்க்கால் மண்ணில் யுத்தத்தின் இறுதிக்கட்டங்கள் இடம்பெற்ற இடத்தில் ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.



## எதிர்கால நிகழ்வுகள்

**ஆடிப்பிறப்பு**

பிலவ வருடத்தின் ஆடிப்பிறப்பு நிகழ்வானது எதிர்வரும் ஆடி மாதம் முதலாம் நாள் சனிக்கிழமையன்று பிற்பகல் நான்கு தொடக்கம் ஆறுமணி வரை இலக்கம் 692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் சுகாதார முறைகளை பின்பற்றி நடைபெற உள்ளது. அத்துடன் பிலவ வருடத்திற்குரிய இரண்டாவது சிவகுரு சங்கமமும் அன்றைய தினம் இடம் பெறவுள்ளது.

சிவகுரு ஆதீனம்
692, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம் : தினசரி பி.ப 4 - 6

+94 21 222 6711 (4 - 6 pm daily)
sivaguruatheenam@gmail.com
சிவகுரு ஆதீனம் - Sivaguru Atheenam

Sivaguru Atheenam
692, Pointpedro road,
Nallur, Jaffna.
Office time : 4 - 6 pm daily

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org